# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 2085/1 - 2018 අගෝස්තු මස 20 වැනි සඳුදා - 2018.08.20

*2085/1 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

(முத்திரை)

மைத்திரிபால சிறிசேன.

**சனாதிபதியின் பணிப்புரை**

அரச துறையில் தற்போது காணப்படும் சம்பளக் கட்டமைப்புக்கள் தொடர்பில் ஆராய்வதற்கும், ஒட்டுமொத்த அரச சேவையிலும் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரச கம்பனிகளதும் பணித்தொகுதிகளிலான பல்வேறு சேவைகளின் பணிப்பொறுப்பு மற்றும் பொறுப்புகள் தொடர்பாக முறைசார் மதிப்பீட்டின் மூலம் ஒவ்வொரு சேவைகளது சம்பள முரண்பாடுகளைக் குறைப்பதற்கும் உழைப்புச் சந்தையினூடாக தகைமைகளைக் கொண்டுள்ள உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும், கவரச்செய்வதற்கும் ஏற்றவகையில் சம்பள முரண்பாடுகளற்ற உயர்மட்டச் சம்பளக் கட்டமைப்பினை அரச துறைக்கு வழங்குவதற்குத் தேவையான பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையின் 2 ஆம் துணை உறுப்புகளுக்கமைய அதியுத்தமராம் சனாதிபதி அவர்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பிரயோகித்து விசேட முகவராண்மையொன்று தாபிக்கப்படல்,

1. எஸ். ரனுக்கே அவர்கள்
2. கே. எல். எஸ். விஜேரத்ன அவர்கள்
3. ரி. பி. கொல்லுரே அவர்கள்
4. சி. பி. சிறிவர்த்தன அவர்கள்
5. திருமதி சுதர்மா கருணாரத்ன அவர்கள்
6. ஜனக சுகததாச அவர்கள்
7. திருமதி தாரணி எஸ். விஜேதிலக்க அவர்கள்
8. லலித் ஆர். டி சில்வா அவர்கள்
9. ஜி. எஸ். எதிரிசிங்க அவர்கள்
10. ஏ. ஆர். தேசப்பிரிய அவர்கள்
11. திருமதி பீ. பி. பி. எஸ். அபேகுணரத்ன அவர்கள்
12. வைத்தியர் பாலித்த அபேகோன் அவர்கள்
13. பி. தங்கமயில் அவர்கள்
14. எஸ். டி. ஜயகொடி அவர்கள்
15. எம். சி. விக்கிரமசேகர அவர்கள்


1A - G 27787 — 32 (2018/08)

**கவனிக்க :-** *2084/1 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானத் தொடரின் இறுதி இல. 2084/66 ஆகும்.*

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*வாழ்த்துக்கள் !*

*நல்லாட்சியில் மக்கள் அபிலாஷைகளை உரிய முறையில் நிறைவேற்றுமுகமாக அரச சேவையின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றை மேம்படுத்தும்நோக்கில் முழு அரச துறையினதும்படிகள் உள்ளிட்ட அனைத்து வேதனக்கட்டமைப்புகளையும் மீளாய்வு செய்து முழு அரச துறையினதும் தனியார் துறையினதும் ஊழியப்படைத் தேவைகள் தகுந்தவாறு பூர்த்தி செய்யப்படுவதை இலகுபடுத்துவதற்காக ஆளணிக் கற்றாராய்வினை மேற்கொண்டு அதற்குப் பொருத்தமாகும் தேசிய சம்பளக் கொள்கை ஒன்றை வகுத்தமைப்பதிலும், அமுல்படுத்துவதிலும் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கி உதவுவதற்காகத் தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழு தாபிக்கப்பட்டிருப்பினும் மேலும் அரச துறையின் சம்பளங்கள் குறித்து விசேடமாக புகைவண்டி, அஞ்சல், சுகாதாரம் போன்ற அதிகூடிய தொழிற்சங்கங்கள் செயற்படுகின்ற சேவைகள் போன்ற நாடளாவிய சேவைகளதும், சம்பளக் கட்டமைப்புகளில் உள்ள சமனற்ற நிலைகள், முரண்பாடுகள் மற்றும் பொருத்தமின்மைகள் முதலியன காரணமாக எழுந்துள்ள விரக்தி நிலைமைகளுக்குக் காரணமான விடயங்களைப் பகுப்பாய்வு செய்து மிக விரைவாகத் தீர்வு வழிகள் பற்றிய பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அரசு எதிர்பார்க்கின்றது.*

*அதற்கமைய தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட அரச சேவையின் சம்பளக் கற்றாராய்வுகள் மற்றும் மீளாய்வுகளின் மூலம் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்றவாறு இற்றைவரைக்கும் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும் முழுமையான அரச கம்பனிகளின் ஊழியர் சம்பளங்களைத் திருத்தி முகாமைத்துவச் சேவைச் சுற்றறிக்கை இல. 02/2016, முப்படைச் சேவையின் பணித்தொகுதியின் சம்பளங்களைத் திருத்தி முகாமைத்துவச் சுற்றறிக்கை இல. 03/2016 உம், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுப் பணித்தொகுதியினதும் பல்கலைக்கழக கல்விசார் மற்றும் கல்விசாரா பணித்தொகுதிகளின் சம்பளங்களைத் திருத்தி முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை இல. 04/2016 உம், இலங்கை நீதிச் சேவை உத்தியோகத்தர்களின் சம்பளங்களைத் திருத்தி முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை இல. 05/2016, 03/2017, 01/2018 மற்றும் 02/2018 உம் பாராளுமன்றப் பணித்தொகுதியின் சம்பளங்களைத் திருத்தி முகாமைத்துவச் சுற்றறிக்கை இல. 06/2016 ஆகிய சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளதைக் கவனத்திற்கொண்டும்,*

*அத்துடன், இவ்வாறு பல்வேறு சந்தர்ப்பங்களின்போது ஒவ்வொரு சேவைகளுக்கும் மேற்கொள்ளப்பட்ட சம்பள அதிகரிப்புகள் காரணமாக மற்றைய சேவைகளும் அதற்குச் சம விகிதமாக தமது சம்பளங்கள் மற்றும் படிகளை அதிகரிக்குமாறு கோர எடுக்கப்படும் தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக எழுந்துள்ள விரக்தி நிலைமைகளையும் இதற்கு இணையாக அரச சேவையின் பெறுபேறுகளை முன்வைக்கும்போது வினைத்திறமை மீது ஏற்படுத்தும்பாதக அழுத்தங்கள் மற்றும் நிதி ரீதியாக அரசுக்கு ஈடுசெய்ய நேரிடும் பொருளாதாரச் செலவுகளைக் கருத்திற்கொண்டும்,*

*அத்துடன் இலங்கை மத்திய வங்கி, அரச வங்கிகள், இலங்கைத் துறைமுக அதிகார சபை, இலங்கை மின்சார சபை, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகிய பாரிய அரச தொழில் துறைகள், கூட்டுமுறையிலான உடன்படிக்கைகளின் பேரில் 20□ - 25□ சதவீதத்தினால் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை அவர்களின் சம்பளங்கள் மற்றும் சகல படிகளை அதிகரித்துக்கொள்ளலுக்கும் அதனூ டாக அதையொத்த பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற அரச சேவையின் பணித்தொகுதிகள், கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், அரச கம்பனிகள் மற்றும் அரச வங்கிகளின் பணித்தொகுதிகள் மாதாந்தம் கையில் கிடைக்கும்* (Take home salary) *சம்பளங்களுக்கும் இடையில் பாரிய முரண்பாடு உருவாகியிருப்பதைக் கவனத்திற்கொண்டும்,*

*அத்துடன் கூட்டு உடன்படிக்கைகளின் பேரில் செயற்படுத்தப்படும் நிறுவனங்களின் பணித்தொகுதிகளுக்குக் கிடைக்கின்ற உயர்மட்ட உழைப்பூதியங்களைக் கருத்திற்கொண்டு அரச துறையின் மற்றைய பணித்தொகுதிகளினாலும் அவர்களின் உழைப்பூதியங்களை அதிகரிக்குமாறு பல கோரிக்கைகள் முன்வைக்கப்படுவதைக் கருத்திற்கொண்டும், அரச தொழில் முயற்சிகளின் பணித்தொகுதிகளுக்காக சம்பளங்கள் மற்றும் படிகளைத் தீர்மானிக்கும்போது சொல்லப்பட்ட நிறுவனங்களினால் உழைக்கப்படும் வருமானம், இலாபம் மற்றும் அரச வருமானத்திற்கான பங்களிப்பு ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டும்,*

*அத்துடன் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 6/2006 இற்கமைய அதுவரை அரச சேவையில் காணப்பட்ட 127 அளவிலான சம்பள அளவுத்திட்டங்களை இற்றைப்படுத்தி எளிதாக்கும் நோக்கில் பதவிகளையும் தரங்களையும் ஒன்றுசேர்த்து முழு மொத்தமான 36 சம்பள அளவுத்திட்டங்களின் கீழ் சிரேட்ட, மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப அடிப்படையில் அரச சேவையின் 04 மட்டங்களின்கீழ் வகுப்பீடு செய்யப்பட்டதன் மூலம் குறிப்பாக புகையிரதச் சேவை, தபால் சேவை மற்றும் சுகாதார சேவை போன்ற அதிகூடிய பதவியணி எண்ணிக்கை வகுப்பீடு இருந்த துறைகளின் சம்பள அளவுத்திட்ட எண்ணிக்கையைக் குறைக்கும்போது அந்தத் துறைகளுக்கு ஏதேனும் பாதகமான அழுத்தங்கள் ஏற்பட்டிருப்பின் அவற்றை ஆராய்ந்து அதற்காகத் தீர்வு வழங்க வேண்டுமென்பதைக் கருத்திற்கொண்டும்,*

*அத்துடன் மேற்கூறிய சகல நிலைமைகளின் பேரில் ஒட்டுமொத்த அரச சேவையின் சம்பளங்கள் மற்றும் படிகள் தொடர்பாக மீண்டும் கருத்திற்கொண்டு மிக விரைவான தீர்வுகள் வழங்காவிட்டால் ஒட்டுமொத்த அரச சேவையினுள் தொழில்சார் பிரச்சினைகள் அதிகரிப்பதன் பயனாக தொழில்நுட்ப அமைதி குலைதல் மற்றும் வேலை நிறுத்தங்கள் செய்யப்படுவதால் மிகவும் பிரச்சினையான நிலைமை உருவாக நாட்டின் மக்கள் வாழ்வுக்கும் முழுமொத்த அபிவிருத்திச் செயற்பாட்டுக்கும் பாதகமான அழுத்தம் ஏற்படும் ஆபத்து உள்ளதென்பதைக் கருத்திற்கொண்டும்,*

இதனகத்துப்பின்னர் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அதாவது,

(அ) அரச சேவையின் சம்பளங்கள் மற்றும்படிகள் தொடர்பாக தற்போது நடைமுறையிலுள்ள சம்பளச் சுற்றறிக்கை ஏற்பாடுகள் மீது கவனம் செலுத்தி, இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவச் சேவைக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள சம்பள அளவுத் திட்டத்தை வழங்கும்போது ஏற்படும் அழுத்தங்களை ஆராய்தலும் அதன்மூலம் எழும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான திறமுறைகளை முன்மொழிதலும்;

(ஆ) அண்மையில் சம்பளங்கள் மற்றும் படிகளை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட புகையிரதச் சேவை, சுகாதாரம், உயர்கல்வி மற்றும் கல்வி, தபால் சேவை ஆகிய துறைகளுக்காகத் தற்போது நடைமுறையிலுள்ள சம்பளச் சுற்றறிக்கைகளின்மூலம் முரண்பாடுகள் ஏதும் ஏற்பட்டிருப்பின் அதனைக் குறைப்பதற்காகத் தீர்வுகளை முன்மொழிதல் ;

(இ) நாடளாவிய சேவைகளுக்குரிய சம்பளப் பிரச்சினைகள் போன்று மேற்கொள்ளப்பட்டுள்ள சம்பள அதிகரிப்புகள் காரணமாகத் தற்போது எழுந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ள சம்பள முரண்பாடுகளைக் குறைப்பதற்கு உரிய பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல் ;

(ஈ) சமமான பொறுப்புக்கள் வகிக்கும் அல்லது அதையொத்த தகைமைகளுடன்கூடிய தொழில்புரிபவர்களினால் அரசாங்க மற்றும் பகுதி அரசாங்கத் துறைகளில் பெறப்படும் சம்பளங்கள் மற்றும் படிகளுக்கிடையில் உள்ள முரண்பாடுகளைக் குறைப்பதற்காக வழிகாட்டும்சம்பளங்கள், படிகள் பற்றிய கட்டமைவுகள் தொடர்பில் பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக அரச துறையின் சம்பள மீளாய்வு தொடர்பான விசேட ஆணைக்குழுவொன்றை (இதனகத்துப் பின்னர் ஆணைக்குழு எனக் குறிக்கப்படும்) தாபித்தல் அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாதலாலும்,

மேலே இனங்காணப்பட்டுள்ளவாறு இந்த ஆணைக்குழுவுக்கு அளிக்கப்படும் பணிகளையும் பொறுப்புகளையும் பூர்த்திசெய்தல் பொதுமக்களின் நலன் கருதி உடன் ஆரம்பிக்கப்பட வேண்டுமென நான் எண்ணுவதாலும், சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், மேற்குறித்த பணிகளையும், பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றுவதற்காக 2018, ஓகத்து மாதம் 20 ஆந் திகதி தொடக்கம் 02 மாத காலப்பகுதிக்காக அரச துறையின் சம்பள மீளாய்வு தொடர்பான விசேட ஆணைக்குழுவினை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையின் (2) ஆம் துணை உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கின்றேன்.

அத்துடன் உங்கள் விவேகம், நேர்மை என்பன பற்றி மிகுந்த நம்பிக்கையும் பற்றுறுதியும்கொண்டு இதன் மூலம் சொல்லப்பட்ட :-

1. எஸ். ரனுக்கே அவர்கள்
2. கே. எல். எஸ். விஜேரத்ன அவர்கள்
3. ரி. பி. கொல்லுரே அவர்கள்
4. சி. பி. சிறிவர்த்தன அவர்கள்
5. திருமதி சுதர்மா கருணாரத்ன அவர்கள்
6. ஜனக சுகததாச அவர்கள்
7. திருமதி தாரணி எஸ். விஜேதிலக்க அவர்கள்
8. லலித் ஆர். டி சில்வா அவர்கள்
9. ஜி. எஸ். எதிரிசிங்க அவர்கள்
10. ஏ. ஆர். தேசப்பிரிய அவர்கள்
11. திருமதி பீ. பி. பி. எஸ். அபேகுணரத்ன அவர்கள்
12. வைத்தியர் பாலித்த அபேகோன் அவர்கள்
13. பி. தங்கமயில் அவர்கள்
14. எஸ். டி. ஜயகொடி அவர்கள்
15. எம். சி. விக்கிரமசேகர அவர்கள்

ஆகிய நீங்கள் அரச சேவையின் சம்பள மீளாய்வு தொடர்பாக விசேட ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக என்னால் இத்தால் நியமிக்கப்படுவதுடன் மேலே (அ) - (ஈ) வரை காட்டப்பட்டுள்ள பணிகளைச் செயற்படுத்தக்கூடியவாறான அத்தகைய சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு இத்தால் நான் பணிக்கின்றேன்.

அத்துடன் திருவாளர் எஸ். ரனுக்கே அவர்களை மேற்படி ஆணைக்குழுவின் தவிசாளராகவும், திருவாளர் எச். ஜீ. சுமனசிங்க அவர்களை ஆணைக்குழுவின் செயலாளராகவும் நான் இத்தால் மேலும் நியமிக்கின்றேன்.

அத்துடன் இதன் மூலம் பொறுப்பளிக்கப்படும் கருமங்களை நிறைவேற்றுவது தொடர்பில் அவசியமானவாறு விசாரணைகளை மேற்கொள்வதற்கும், விடயங்களைப் புலனாய்வு செய்யும்பொருட்டு ஆலோசனைகளை வழங்குவதற்கும் ஆணைக்குழுவிற்கு இத்தால் நான் தத்துவம் அளிக்கின்றேன்.

அத்துடன் ஆணைக்குழுவினால் ஆலோசனை வழங்கப்படக்கூடிய அல்லது தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு உதவி கோரக்கூடிய எல்லா அரசாங்க உத்தியோகத்தர்களும் அத்தகைய வேறு ஆட்களும் அந்தக் கருமம் தொடர்பாக அத்தகைய ஆலோசனைகளுக்கு அமைவாகச் செயற்பட வேண்டுமென்றும் அளிக்கக்கூடியவாறான எல்லா உதவிகளையும் அளிக்க வேண்டுமென்றும் அளிக்கக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தகவல்களையும் கொடுத்துதவ வேண்டுமென்றும் நான் இத்தால் சகல அரசாங்க உத்தியோகத்தர்களையும் ஏனைய ஆட்களையும் தேவைப்படுத்திப் பணிக்கின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலட்சினையின்கீழ் இரண்டாயிரத்துப்பதினெட்டாம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி கொழும்பில் என்னால் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

உதய ஆர். செனெவிரத்ன,
சனாதிபதியின் செயலாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.